# கடன் பத்திரங்கள் மூலம் ரூ.14.13 லட்சம் கோடி



மத்திய அரசின் வருவாய் பற்றாக்குறையை எதிர்கொள்ள கடன் பத்திரங்களை வெளியிட்டு ரூ.14.13 லட்சம் கோடி திரட்ட முடிவு செய்துள்ளதாக இடைக்கால பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் 1-ஆம் தேதி தொடங்கும் புதிய நிதியாண்டில் இருந்து இந்தக் கடன் பத்திரங்கள் மூலம் நிதி திரட்டும் பணி தொடங்கும்.

கடந்த ஆண்டு பட்ஜெட்டில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு ரூ.15.43 லட்சம் கோடி கடன் வாங்க முடிவு செய்யப்பட்டது. இந்த பட்ஜெட்டில் கடன் வாங்கும் இலக்கு அதைவிட சற்று குறைந்துள்ளது. வரி வருவாய் அதிகரித்துள்ளதே அரசு கடன் வாங்குவதைக் குறைப்பதற்கு முக்கியக் காரணமாகும்.

# பிஎம் கிஸான்: 11.8 கோடி விவசாயிகளுக்கு நிதியுதவி

பிரதமரின் விவசாயிகள் உதவித் தொகை (பிஎம் கிஸான்) திட்டத்தின் கீழ், நாடு முழுவதும் 11.8 கோடிக்கும் அதிகமான விவசாயிகளுக்கு நிதியுதவி வழங்கப்பட்டு வருவதாக மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.



உலகின் மாபெரும் நேரடி பலன் பரிமாற்றத் திட்டங்களில் ஒன்றான 'பிஎம் கிஸான்' திட்டத்தின்கீழ், விவசாயிகளுக்கு ஆண்டொன்றுக்கு தலா ரூ.6,000 நிதியுதவி மூன்று தவணைகளாகப் பிரித்து வழங்கப்படுகிறது.

நேரடி பலன் பரிமாற்றத்தின் கீழ், விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக இத்தொகை செலுத்தப்படுகிறது. கடந்த 2019 இடைக்கால பட்ஜெட்டின்போது இத்திட்டம் அறிவிக்கப்பட்டது.

# 'ஸ்டார்ட் அப்' நிறுவனங்களுக்கான வரிச் சலுகை மேலும் ஓராண்டுக்கு நீட்டிப்பு

புது தில்லி, பிப். 1: 'ஸ்டார்ட் அப்' புத்தாக்கத் தொழில் நிறுவனங்கள் மற்றும் ஓய்வூதிய நிதியில் செய்யப்படும் முதலீடுகளுக்கான வருமான வரிச் சலுகைகள் வரும் நிதியாண்டிலும் தொடரும் என மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் இடைக்கால பட்ஜெட்டில் அறிவித்தார்.

பொருளாதாரத்தில் ஸ்டார்ட் அப் நிறுவனங்களின் பங்கை ஊக்குவிக்கும் வகையில் சலுகைகளை வழங்குவது நாட்டின் முன்னேற்றத்துக்கு அவசியமாகிறது.

அதன்படி 'ஸ்டார்ட் அப் இந்தியா' திட்டத்தின்கீழ், நாட்டில் கடந்த 2016-ஆம் ஆண்டுமுதல் தொடங்கப்பட்ட புதிய ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்கு வருமான வரிச் சலுகை வழங்கப்படுகிறது.

மத்திய அரசிடம் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் தங்களின் முதல் 10 ஆண்டுகளில் ஏதேனும் தொடர் 3 ஆண்டுகளுக்கு வருமான வரி செலுத்துவதில் இருந்து சலுகை பெறலாம்.

கடந்த ஆண்டு பட்ஜெட்டின்படி வரும் மார்ச் 31-ஆம் தேதி வரை பதிவு செய்யப்படும் நிறுவனங்களுக்கு மட்டுமே இந்த வரிச் சலுகை பொருந்துவதாக விதி உள்ளது.

இந்நிலையில், வியாழக்கிழமை தாக்கல் செய்யப்பட்ட இடைக்கால பட்ஜெட்டில், வரும் நிதியாண்டில் பதிவு செய்யப்படும் நிறுவனங்களுக்கும் வரிச் சலுகை பொருந்தும் என அமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவித்தார்.

நாட்டில் ஸ்டார்ட் அப் அமைப்புகளை ஊக்குவிக்க பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், மத்திய அரசிடம் தற்போதுவரை 1.17 லட்சம் நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

அதேபோல், வரும் மார்ச் 31-ஆம் தேதியுடன் காலாவதியாகும் நாட்டின் சில சர்வதேச நிதிச் சேவை மைய (ஐஎஃப்எஸ்சி) பிரிவுகளின் குறிப்பிட்ட வருமானத்தின் மீதான வரி விலக்கு, அரசு அல்லது ஓய்வூதிய நிதி கொண்டு செய்யப்படும் முதலீடுகளுக்கான சில வரிச் சலுகைகள் அடுத்த நிதியாண்டுவரை நீட்டிக்கப்படுகிறது.

**மின் வாகனப் பயன்பாடு:** மின்னேற்றி மற்றும் உற்பத்தி உள்கட்டமைப்பை வலுவாக்குவதன் மூலம் மின் வாகனப் பயன்பாட்டை மத்திய அரசு விரிவுபடுத்தும் என்று நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பட்ஜெட் உரையின்போது தெரிவித்தார்.

**வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்**
**மற்றைய எல்லாம் பிற.**

ஒரு தொழிலின் திட்பம் என்று சொல்லப்படுவது ஒருவனுடைய மனத்தின் திட்பமே (உறுதியே) ஆகும்; மற்றவை எல்லாம் வேறானவை.

திருக்குறள் (எண்: 661) *அதிகாரம்: வினைத்திட்பம்*

# ஒரு கோடி வீடுகளில் பிரதமரின் சூரிய மின்சார திட்டம்: ஆண்டுக்கு ரூ.18,000 சேமிப்பு

**புது தில்லி, பிப். 1:** 'பிரதமரின் சூரியோதய திட்டம் மூலம் ஒரு கோடி வீடுகளில் மாதத்துக்கு 300 யூனிட் உற்பத்தி செய்யலாம். இதனால், ஆண்டுக்கு ரூ.18,000 வரை அந்தக் குடும்பத்தினர் சேமிக்க முடியும் இதன் மூலம் 300 யூனிட் மின்சாரத்தை இலவசமாக பெறலாம்' என மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

நாட்டில் உள்ள ஒரு கோடி வீடுகளில் சூரிய மின்சக்தி தகடுகளைப் பொருத்தும் புதிய திட்டத்தைத் தொடங்கவிருப்பதாக பிரதமர் நரேந்திர மோடி கடந்த மாதம் அறிவித்திருந்தார்.

இந்தத் திட்டம் தொடர்பாக மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமன் இடைக்கால பட்ஜெட்டை தாக்கல் செய்து உரையாற்றுகையில், 'பிரதமரின் சூரிய மின்சார திட்டத்தின் கீழ் ஒரு கோடி வீடுகளில் பொருத்தப்படும் சூரிய மின்சக்தி தகடுகள் மூலம் ஒவ்வொரு மாதமும் 300 யூனிட் அளவு மின்சாரம் உற்பத்தி செய்யப்படும்.

இத்தகைய இலவச சூரிய மின்சாரத்திலிருந்து ஆண்டுக்கு ரூ.15,000-ரூ.18,000 அந்தக் குடும்பத்தினரால் சேமிக்க முடியும். எஞ்சிய மின்சாரத்தை மின்பகிர்மான நிறுவனங்களுக்கு அவர்கள் விற்பனை செய்யலாம். மின்சார வாகனங்களுக்கான மின்னேற்றம் செய்தல், சூரிய மின்சக்தி தகடுகள் விற்பனை, அவற்றைப் பொருத்துதல் ஆகியவற்றால் அதிக எண்ணிக்கையிலான வியாபாரிகளுக்குத் தொழில் வாய்ப்புகள் கிடைப்பதில் இந்தத் திட்டம் உதவிகரமாக இருக்கும்.

சூரிய மின்சக்தி தகடுகள் உற்பத்தி, அவற்றைப் பொருத்துதல், பராமரிப்பு போன்ற தொழில்நுட்பத் திறன் கொண்ட இளைஞர்களுக்கு இந்தத் திட்டத்தால் வேலைவாய்ப்புகள் உருவாகும்.

தொடக்கக் கட்டமாக கடற்கரையோரங்களில் நிறுவப்படும் ஒரு ஜிகாவாட் மின்திறன் கொண்ட காற்றாலை மின்திட்டத்துக்கான உள்கட்டமைப்புக்கு நிதி ஆதரவு அளிக்கப்படும்' என்றார்.

**ரூ.10,000 கோடி ஒதுக்கீடு:** இடைக்கால பட்ஜெட் தொடர்பாக நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய மத்திய நிதியமைச்சக செயலர் டி.வி.சோமநாதன், பிரதமரின் சூரிய மின்சார திட்டத்துக்கு ரூ.10,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதாகத் தெரிவித்தார்.

கரியமில வாயு வெளியேற்றத்தை 2027-ஆம் ஆண்டுக்குள் பூஜ்ஜியமாகக் குறைக்க மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. இதற்காக, 2030-ஆம் ஆண்டுக்குள் புதுப்பிக்கத்தக்க ஆற்றலிருந்து 500 ஜிகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலங்களிலிருந்து உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் கடந்த 10 ஆண்டுகளில் 81 ஜிகாவாட்டிலிருந்து 188 ஜிகாவாட்டாக உயர்ந்திருப்பதாக நாடாளுமன்ற கூட்டுக் கூட்டத்தில் புதன்கிழமை ஆற்றிய உரையில் குடியரசுத் தலைவர் திரௌபதி குறிப்பிட்டிருந்தார்.

மத்திய மின்சார ஆணையத்தின் தரவுப்படி, நாட்டில் சூரிய மின்சக்தியிலிருந்து 73 ஜிகாவாட்டுக்கும் அதிகமாக மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.

காற்றாலைமின்சக்தியிலிருந்து 45 ஜிகாவாட், பெரிய மற்றும் சிறிய நீர் மின்திட்டங்களிலிருந்து முறையே 47 ஜிகாவாட், 5 ஜிகாவாட், உயிரி ஆற்றலிலிருந்து 10 ஜிகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.

# விளையாட்டு அமைச்சகத்துக்கு ரூ.3,442 கோடி ஒதுக்கீடு

புது தில்லி, பிப். 1: நிகழாண்டு பட்ஜெட்டில் விளையாட்டுத் துறை அமைச்சகத்துக்கு ரூ.3,442.32 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு ரூ.3,396.96 கோடி ஒதுக்கப்பட்ட நிலையில் நிகழாண்டு ரூ.45.36 கோடி கூடுதல் நிதியாக ஒதுக்கப்பட்டுள்ளது.

நிகழாண்டுக்கான இடைக்கால பட்ஜெட்டை நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் வியாழக்கிழமை தாக்கல் செய்தார். அதில், பாரிஸில் நிகழாண்டு ஜூலை 26 முதல் ஆகஸ்ட் 11 வரை நடைபெறவுள்ள ஒலிம்பிக் விளையாட்டு போட்டிகளில் கவனம் செலுத்துவதே 2024-25-ஆம் நிதியாண்டின் முக்கிய நோக்கமாக உள்ளது.

கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிக்கு ரூ.900 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. விளையாட்டு வீரர்களுக்கான உபகரணங்கள் வழங்குதல், தேசிய அளவிலான முகாம் அமைத்தல், உள்கட்டமைப்பு வசதிகள் போன்ற பணிகளில் இந்திய விளையாட்டு ஆணையம் ஈடுபட்டு வருகிறது. இந்த ஆணையத்துக்கு நடப்பு ஆண்டு ரூ.795.77 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டதையடுத்து நிகழாண்டு கூடுதலாக ரூ.26.83 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு தேசிய விளையாட்டு கூட்டமைப்புக்கு ரூ.325 கோடி ஒதுக்கப்பட்ட நிலையில் நிகழாண்டு கூடுதலாக ரூ.15 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. தேசிய ஊக்கமருந்து சோதனை ஆய்வகத்துக்கு ரூ.22 கோடி நிதி ஒதுக்கப்படுகிறது. இது நடப்பு ஆண்டை விட ரூ.2.5 கோடி கூடுதலாகும்.

தேசிய ஊக்க மருந்து தடுப்பு மையத்திற்கு நடப்பு ஆண்டு ரூ.21.73 கோடி நிதி ஒதுக்கப்பட்டிருந்த நிலையில் நிகழாண்டு ரூ.22.30 கோடி ஒதுக்கப்படுகிறது.

தேசிய விளையாட்டு அறிவியல் மற்றும் ஆராய்ச்சி மையத்திற்கு கடந்த ஆண்டு ரூ.10 கோடி ஒதுக்கப்பட்ட நிலையில் நிகழாண்டு ரூ.8 கோடி ஒதுக்கப்படுகிறது.

தேசிய விளையாட்டுப் பல்கலைக்கழகத்துக்கு நடப்பு ஆண்டு ரூ.83.21 கோடி ஒதுக்கப்பட்டது. நிகழாண்டு இத்தொகை ரூ.91.90 கோடியாக அதிகரிக்கப்படுகிறது.

விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்பட்டு வந்த ஊக்கத்தொகை ரூ.84 கோடியாக இருந்த நிலையில் தற்போது ரூ.39 கோடியாக குறைக்கப்படுகிறது. அதேபோல் தேசிய விளையாட்டு மேம்பாட்டு நிதிக்கு ஒதுக்கப்பட்ட ரூ.46 கோடி தற்போது ரூ.18 கோடியாக குறைக்கப்படுகிறது. பன்முக திறனாளர் தேசிய விளையாட்டு வீரர்களுக்கான நலத்திட்டத்துக்கு ரூ.2 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

ஜம்மு-காஷ்மீரில் விளையாட்டு மேம்பாட்டுக்காக ரூ.20 கோடி வழங்கப்பட்டு வந்த நிலையில் தற்போது ரூ.8 கோடியாக குறைக்கப்படுகிறது.

காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளுக்கான நிதி நடப்பு ஆண்டு ரூ.15 கோடியாக இருந்த நிலையில் நிகழாண்டு ரூ.1 லட்சமாக குறைக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது.

## பிரக்ஞானந்தாவுக்கு பாராட்டு

புது தில்லி, பிப். 1: பட்ஜெட் உரையின்போது தமிழகத்தைச் சேர்ந்த செஸ் கிராண்ட்மாஸ்டர் பிரக்ஞானந்தாவின் பெயரைக் குறிப்பிட்டு நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பாராட்டினார்.

விளையாட்டுத் துறையில் இளைஞர்கள் குறித்து அவர் பேசியதாவது:

நமது இளைஞர்கள் விளையாட்டுத் துறையில் புதிய சாதனைகளைப் படைத்து வருகின்றனர். ஆசிய விளையாட்டு, ஆசிய பாரா விளையாட்டுப் போட்டிகளில் பதக்கப் பட்டியலில் இந்தியா முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு அதிக பதக்கங்களைக் குவித்தது.

செஸ் விளையாட்டின் வியத்தகு திறமையாளரான நமது நாட்டின் பிரக்ஞானந்தா, உலக சாம்பியன் மேக்னஸ் கார்ல்சனுக்கு கடும் சவால் அளித்தார். 2010-ஆம் ஆண்டு இந்தியாவில் வெறும் 20 செஸ் கிராண்ட் மாஸ்டர்கள் இருந்த நிலையில், இப்போது 80-க்கும் மேற்பட்ட கிராண்ட் மாஸ்டர்கள் உள்ளனர் என்றார்.



# அநத்யோதயா குடுமப அடடைதாராகளுககு 2 ஆண்டுகளுக்கு சர்க்கரை மானியம் நீட்டிப்பு

## மத்திய அமைச்சரவை ஒப்புதல்

**புது தில்லி, பிப்.1:** அந்தியோதயா அன்ன யோஜனா குடும்ப அட்டைதாரர்களுக்கு சர்க்கரை மானிய திட்டத்தை 2 ஆண்டுகளுக்கு நீட்டிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இதுதொடர்பாக மத்திய அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பு: தில்லியில் பிரதமர் மோடி தலைமையில் மத்திய அமைச்சரவைக் கூட்டம் வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில், அந்தியோதயா அன்ன யோஜனா குடும்ப அட்டைதாரர்களுக்கு, பொது விநியோகத் திட்டம் மூலம் விநியோகிக்கப்படும் சர்க்கரை மானிய திட்டத்தை 2 ஆண்டுகளுக்கு நீட்டிக்க ஒப்புதல் அளிக்கப்பட்டது.

2026-ஆம் ஆண்டு மார்ச் வரை, மானிய திட்டத்தை நீட்டிக்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ், அந்தியோதயா அன்ன யோஜனா குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகிக்கப்படும் சர்க்கரைக்கு மாதந்தோறும் கிலோவுக்கு ரூ.18.50 மத்திய அரசு மானியம் வழங்குகிறது.

இதன்மூலம், நாடு முழுவதும் சுமார் 1.89 கோடி அந்தியோதயா அன்ன யோஜனா குடும்ப அட்டைதாரர்கள் பயனடைவர்.

இதேபோல ஆடைகள், கையுறைகள், தொப்பிகள் உள்ளிட்டவற்றுக்கான மத்திய,மாநில வரிகள் மற்றும் தீர்வைகளுக்கு தள்ளுபடி வழங்கும் திட்டத்தை (ஆர்ஓஎஸ்சிடிஎல்) 2026-ஆம் ஆண்டு மார்ச் 31 வரை தொடரவும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது என்று தெரிவிக்கப்பட்டது.

# அதிக ராம்சர் தளங்களைக் கொண்ட மாநிலம் தமிழகம்

## வனத் துறைச் செயலர் சுப்ரியா சாஹு

சென்னை,பிப்.1: இந்தியாவில் அதிக ராம்சர் தளங்களை கொண்ட மாநிலமாக தமிழகம் உள்ளது என வனத் துறைச் செயலர் சுப்ரியா சாஹு தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தமிழகத்தில் ஏற்கெனவே 14 ராம்சர் தளங்கள் உள்ள நிலையில், அண்மையில் தமிழகத்தில் உள்ள கரைவெட்டி பறவைகள் சரணாலயம் மற்றும் லாங்வுட் சோலை காப்புக்காட்டை ராம்சர் தளங்களாக அறிவிக்க தமிழக அரசு பரிந்துரைகளை அனுப்பியது.

இந்த இரு இடங்கள், மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகம் மற்றும் ராம்சர் தளங்கள் செயலகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டு புதன்கிழமை ராம்சார் தளங்களாக அறிவிக்கப்பட்டன. இதன் மூலம், தமிழகத்தில் மொத்த ராம்சர் தளங்களின் எண்ணிக்கை 16-ஆக அதிகரித்துள்ளது.

அதன் மூலம் நாட்டில் அதிக ராம்சர் தளங்களைக் கொண்ட மாநிலமாக தமிழகம் திகழ்கிறது.

**கரைவெட்டி பறவைகள் சரணாலயம்:** கரைவெட்டி பறவைகள் சரணாலயம் அரியலூர் மாவட்டத்தில் 453.7 ஹெக்டேர் பரப்பளவில் அமைந்துள்ளது. இந்தத் தளம் 500-க்கும் மேற்பட்ட தாவரங்கள் மற்றும் விலங்கினங்களின் இருப்பிடமாக செயல்படுகிறது. இந்த சதுப்பு நிலம் நிலத்தடி நீர்மட்டம் உயர முக்கிய காரணமாக திகழ்கிறது.

**லாங்வுட் சோலை காப்புக்காடு:** லாங்வுட் சோலை காப்புக்காடு நீலகிரி மாவட்டத்தில் 116.007 ஹெக்டேர் பரப்பளவில் அமைந்துள்ளது. இந்த தளம் 700- க்கும் மேற்பட்ட தாவரங்கள் மற்றும் விலங்கினங்களின் இருப்பிடமாக செயல்படுகிறது.

தமிழகத்தில் உள்ள 100 சதுப்பு நிலங்களைப் பாதுகாக்க ரூ.115.15 கோடி செலவில் 'தமிழ்நாடு சதுப்பு நிலங்கள் இயக்கம்' என்ற திட்டத்தை தமிழக அரசு ஏற்கெனவே அறிவித்து செயல்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது என அதில் தெரிவித்துள்ளார் அவர்.

சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை
தமிழ்நாடு ஈரநிலங்கள் இயக்கம்

பிப்ரவரி 02
உலக ஈரநிலங்கள் தினம்



# ஈரநிலங்கள் பாதுகாப்பில் மாபெரும் புரட்சி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

**திரு. மு.க.ஸ்டாலின்**

அவர்களின் தலைமையின்கீழ்

## தமிழ்நாட்டில் 15 புதிய ராம்சார் தலங்கள்



**கரைவெட்டி**
பறவைகள் சரணாலயம்
அரியலூர்



**லாங்வுட் சோலை**
காப்புக்காடு
நீலகிரி






**சித்திரங்குடி**
பறவைகள் சரணாலயம்
இராமநாதபுரம்



**மன்னார் வளைகுடா**
உயிர்க்கோள காப்பகம்
இராமநாதபுரம்



**சுசீந்திரம் தேரூர்**
ஈரநில வளாகம்
கன்னியாகுமரி



**வேடந்தாங்கல்**
பறவைகள் சரணாலயம்
செங்கல்பட்டு



**வெள்ளோடு**
பறவைகள் சரணாலயம்
ஈரோடு



**பிச்சாவரம்**
அலையாத்திக்காடுகள்
கடலூர்



**பள்ளிக்கரணை**
சதுப்புநில காப்புக்காடு
சென்னை



**உதயமார்த்தாண்டபுரம்**
பறவைகள் சரணாலயம்
திருவாரூர்



**வேம்பனூர்**
ஈரநில வளாகம்
கன்னியாகுமரி



**காஞ்சிரங்குளம்**
பறவைகள் சரணாலயம்
இராமநாதபுரம்



**வடுவூர்**
பறவைகள் சரணாலயம்
திருவாரூர்



**கரிக்கிலி**
பறவைகள் சரணாலயம்
செங்கல்பட்டு



**கூந்தன்குளம்**
பறவைகள் சரணாலயம்
திருநெல்வேலி

# ‘பிப்ரவரி முழுவதும் ஆவின் தினம் கொண்டாட்டம்’

**சென்னை,** பிப்.1: ஆவின் தினத்தையொட்டி பிப்ரவரி மாதம் முழுவதும் பல்வேறு வகையான நிகழ்ச்சிகள் நடத்தப் படும் என பால்வளத்துறை இயக்குநர் மற்றும் ஆவின் மேலாண்மை இயக்குநர் சு.வினீத் தெரிவித்துள்ளார்

ஆவின் தினம், ஆண்டுதோறும் பிப்.1-ஆம் தேதி கொண் டாடப்படுகிறது. இதனை முன்னிட்டு சென்னை மாதவரத் தில் உள்ள ஆவின் திறன் மேம்பாட்டு மையத்தில் ஆவின் விற்பனை பிரிவு அலுவலர்கள் கலந்து கொண்ட நிகழ்ச்சி வியாழக்கிழமை நடைபெற்றது. இதில் அண்ணா பயிற்சி மேலாண்மைக் கழக பயிற்சியாளர் ஷீலா கிருஷ்ணன், ஆவின் விற்பனைப் பிரிவு அலுவலர்களுக்கு ஊக்கமூட்டும் வகையில் தன்னம்பிக்கை உரை நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு சு.வினீத் பேசியதாவது: 1981-ஆம் ஆண்டு தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டு றவு இணையம் (ஆவின்) உருவாக்கப்பட்ட நாளான பிப். 1-ஆம் தேதி ஆவின் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது. அதன்படி, பிப்ரவரி மாதம் முழுவதும் ஆவின் நிறுவனம் மற் றும் மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்களை உள்ளடக்கிய பல் வேறு வகை நிகழ்ச்சிகள் நடத்தப்படவுள்ளன. இதன் மூலம் ஆவினைப் பற்றி மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி, மக்களின் தேவையை முன்னறிந்து அதன் மூலம் ஆவின் பொருள்களின் விற்பனையை அதிகரிப்பதுடன் ஆவின் நிறு வனத்துக்கு வருவாயையும் அதிகரிக்கலாம் என்றார் அவர்.

இந்நிகழ்வில் ஆவின் விற்பனைப் பிரிவு, உற்பத்திப் பிரிவு சேர்ந்த அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.